**கவனிக்க** - 10.10.2025 ஆந் திகதிய 2458 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2459 - 2025 ඔක්තෝබර් මස 17 වැනි සිකුරාදා - 2025.10.17**
2459 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 892 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 900 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பிபிலை பிரதேச சபை**

வரவு செலவு வரைவு ஆவணம் பரிசீலனை செய்தல் - 2026

பிபிலை பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு வரைவு ஆவணம் பொது மக்களுடைய பரிசீலனைக்காக பிபிலை பிரதேச சபை காரியாலயத்தில் 2025.10.30 ஆம் திகதி தொடக்கம் 2025.11.10 ஆம் திகதி வரை வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

வீ. சரத் விதானகம,
தவிசாளர்,
பிபிலை பிரதேச சபை.

10-151

---

**யட்டிநுவர பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ்
விடுக்கப்படும் அறிவித்தல்

யட்டிநுவர பிரதேச சபையின் ஆளுகைப் பிரிவுக்குள் யட்டிநுவர பிரதேச சபையின் மூலம் நடாத்திச் செல்லப்பட்டு வரும் வீதிகள் / பாதைகள் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கைகளைப் பேணி வருவதற்கென 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்கள் 2025.07.18 ஆந் திகதி முதல் 2028.07.18 ஆம் திகதிவரை அனுமதி வழங்கியுள்ளதனால், இங்கு அட்டவணையின் கீழ் விபரிக்கப்படும் பாதைகள் / வீதிகள் யட்டிநுவர பிரதேச சபைக்குரிய பாதைகள் /வீதிகள் எனக் கருதுவதற்கென 2025.02.24 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவக் கமிட்டியின் 528 ஆம் இலக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதனால், இதற்கான எதிர்ப்புகள் இருப்பின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கமைய செயற்படுமாறு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

நளின் எரந்த பிட்டியேகும்புர,
தவிசாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

யட்டிநுவர பிரதேச சபை அலுவலகம்,
எம்பில்மீகம,
பிலிமதலாவ,
2025, ஓகத்து 31.

**அட்டவணை**

| *தொ. இல.* | *பாதையின் பெயர்* | *கிராம அவலர் பிரிவு* | *ஆரம்பம்* | *முடிவு* | *இடதுபுறம்* | *வலதுபுறம்* | *நீளம்* | *அகலம்* | *நில வரை பட உறுதி இல.* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | கடுகண்ணாவ பொத்தபிட்டிய வீதியில் 7 ஆம் கட்டை அருகில் செல்லும் பாதை | மாதிலிகம | கடுகண்ணாவ பொத்தபிட்டிய வீதியில் 7 ஆம் கட்டை அருகில் | நெல்வயல் முடியும் இடம் | 1.எம்.ஆர். ரத்ன மெனிகே<br>2. எம்.ஆர். பிரேமாவதி மெனிகே<br>3. எம்.ஆர். ஸ்வர்ணதிலகா | 1.ஜீ.டப்ளிவ். ஜீ.ரீ. சேனாரத்ன | 175 அடி | 10 அடி | 10788 |

10-152

---

**மாத்தளை பிரதேச சபை**

1893 ஆம் ஆண்டின் ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் எதிர்ப்பைக் கோருதல்

மாத்தளை பிரதேச சபை 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆம் திகதி அன்று நடைபெற்ற அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் 5.1 ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

ஈ.எம்.கே.எஸ்.பி. ஜயரத்ன,
தவிசாளர்,
மாத்தளை பிரதேச சபை,
பலாபத்வல.

மாத்தளை பிரதேச சபை அலுவலகம்,
பலாபத்வல.
2025, செத்தெம்பர் 20.

**தீர்மானம்**

1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 3ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மாத்தளை பிரதேச சபையின் நிருவாகப் பிரதேசத்துக்குள் 2025 ஆம் ஆண்டில் மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தை நடாத்திச் செல்வதற்கெனப் பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பில் எதிர்ப்புகள் கோரப்படுவதுடன், இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் எதிர்ப்பதாயின், உரிய காரணங்களை எழுத்துமூலம் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 நாட்களுக்குள் இரண்டு பிரதிகளில் மாத்தளை பிரதேச சபையிடத்தில் தெரிவிக்குமாறு ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாத்தளை பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்* | *மாட்டிறைச்சி விற்பனை நிலையம் நடாத்திச் செல்லப்படும் இடம்* | *இறைச்சி வகை* |
|---|---|---|
| எஸ்.எச்.எம். பளீல்<br>இலக்கம் 38 /4, கோட்டேகொட,<br>பலாபத்வல,<br>மாத்தளை. | இலக்கம் 38/4, கோட்டேகொட,<br>பலாபத்வல,<br>மாத்தளை. | மாடு |

10-153

---

**பொல்பிடிகம பிரதேச சபை**

வரவு செலவு திட்ட அறிக்கை - 2026

பொல்பிடிகம பிரதேச சபைக்கான 2026 ஆம் வருடத்திற்கான வரவு சிலவு திட்ட அறிக்கை 2025.10.17 ஆம் தினத்திலிருந்து 2025.10.28 ஆந் திகதி வரை (அரச விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த) அலுவலக நேரங்களில் மக்களின் பார்வைக்காக வேண்டி பொல்பிடிகம பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்படும் என்பதை கொள்முதல் அமுலாக்க விதிகளின் விதி 10.2 (ஆ) இன் அடிப்படையில் பொது மக்களுக்கு நான் இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

இ.எம். மஹிந்த,
தலைவர்
பொல்பிடிகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பொல்பிடிகம,
2025, ஒற்றோபர் 08.

10-166

---

**பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் செயல்படுத்தல் விதிகளின் பிரிவு 10(2) இன் படி, இப் பிரதேச குடிமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பு**

2026 ஆம் ஆண்டுக்கான நாரம்மல பிரதேச சபையின் வரவு செலவுத் திட்ட ஆவணம் பொதுமக்களின் பார்வகைக்கு வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

2025.10.08 அன்று நாரம்மல பிரதேச சபை **தலைமை அலுவலகத்தில்**

ஆர்.எம்.எச்.ஆர். ரத்னாயக்க,
தலைவர்,
நாரம்மல பிரதேச சபை.

தொலைபேசி - 0372249275
பெக்ஸ் - 0372249681
மின்னஞ்சல் - narammalaps@gmail.com

10-202

**வேலணை பிரதேச சபை - வேலணை**

ஆதன மதிப்பீட்டு வரி விதித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 146 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2132 ஆம் இலக்க மற்றும் 12.07.2019 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் வேலணை பிரகாரம் சபை ஆளுகைக்கு உட்பட்ட வேலணை தெற்கு வட்டாரத்திற்கான அனைத்து வதிவிட வர்த்தக கட்டடங்கள், காணிகள். வீடுகள் போன்ற நிலையான சொத்துக்களின் வருடாந்த மதிப்பீடு சம்பந்தமாக 2025 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான ஆதனங்களின் வருடாந்த மதிப்பீட்டு பெறுமதியாக ஏற்றுக்கொள்வதெனவும் 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிலிருந்து ஆதனவரியினை அறவீடு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (1) உப பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும் ஆதனங்களின் வருடாந்த மதிப்பின் பிரகாரமும் வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வேலணை தெற்கு வட்டாரத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு அசையாச்சொத்தின் ஆண்டுப்பெறுமதியில் 5% இணை வருடாந்த வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டின் வரிப்பணத்தினை 01.10.2025 தொடக்கம் 31.12.2025 வரையான காலப்பகுதிக்குள் செலுத்துதல் வேண்டும். எனினும், குறித்த காலாண்டுக்கான வரிப்பணத்தினை 31.10.2025 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வேலணை பிரதேச சபைக்கு செலுத்துவதாயின் அந்த காலாண்டு வரிப்பெறுமதியின் 5% கழிவாக வழங்கப்படும். மேலும் குறித்த காலப்பகுதிக்குள் செலுத்தத்தவறின் வெறுங்காணிகள் மற்றும் வதிவிட ஆதனங்களுக்கு 15% வெற்று நிலங்களும் வதிவிட நிலங்களும் தவிர்ந்த ஏனைய ஆதனங்களின் மீது 20% உம் தண்டமாகவும் அறவிடப்படும்.

சிவலிங்கம் அசோக்குமார்,
தவிசாளர்,

பிரதேச சபை அலுவலகம்,
வேலணை.

10-205

---

**வேலணை பிரதேச சபை - வேலணை**

ஆதன மதிப்பீட்டு ஏடு காட்சிப்படுத்தல் மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது மற்றும் 141 (3) ஆவது பிரிவுகளின் கீழ் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வேலணை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள வேலணை தெற்கு வட்டாரத்திற்கான அனைத்து வதிவிட, வர்த்தக கட்டடங்கள், காணிகள், வீடுகள் போன்ற நிலையான சொத்துக்களின் வருடாந்த மதிப்பை பதிவு செய்துள்ள மதிப்பீட்டு ஏடானது 22.09.2025 ஆம் திகதி தொடக்கம் 21.10.2025 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரையான காலப்பகுதியில் வேலணை பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் கட்டணங்கள் எதுவுமின்றி பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

குறித்த ஆதனங்களின் வருடாந்த மதிப்பீட்டு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருப்பின்குறித்த கால எல்லைக்குள் ''தவிசாளர், வேலணை பிரதேச சபை, வேலணை'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது அலுவலக நாட்களில் மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரையிலான காலத்தினுள் நேரடியாக சமர்ப்பிக்க முடியும் என்பதனையும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

மேலும் குறித்த வட்டார ஆதனங்களின் மதிப்பீட்டு ஏட்டில் வருடாந்த மதிப்பீடு தொடர்பான விபரங்களை பார்வையிடுவதற்கு காணியின் உரிமையாளருக்கு அல்லது சட்டபூர்வமான குடியிருப்பாளருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்பதனை விசேடமாக தெரிவிப்பதுடன் மதிப்பீட்டு பதிவேட்டை பார்வையிடுவதற்காக வருவோர் தத்தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டயமாகவும் கருதப்படுகிறது.

திரு. சிவலிங்கம் அசோக்குமார்,
தவிசாளர்,

வேலணை பிரதேச சபை,
வேலணை.

10-206

---

**நீர்கொழும்பு மாநகர சபை**

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272) ஆம் அதிகாரத்தின் கீழ் எதிர்ப்புத் தெரிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர், நுவனி சுதுசிங்க ஆகிய நான் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 286(அ) பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 2025 ஆம் ஆண்டிற்காக இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடத்தில் மாட்டிறைச்சி விற்கும் வியாபாரம் நடாத்திச் செல்வதற்கான விண்ணப்பம் என்னிடம் முன்வைக்கப்பட்டுள்ளமையால், அந்த அனுமதிப்பத்திரம் வழங்குவதில் நீர்கொழும்பு மாநகர சபை பிரதேசத்தில் வசிப்பவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்களாயின் அவர்கள் எக்காரணத்திற்காக எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள் என்பதனை எழுத்து பூர்வமாக 02 பிரதிகளுடன் இவ் அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரம் IV (ஆ) பகுதியில் வெளியிட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பதிவு தபால் மூலம் மாநகர ஆணையாளர் பெயரிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதனை ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272) ஆம் அதிகாரத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் அறியத்தருகின்றேன்.

நுவனி சுதுசிங்க,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
நீர்கொழும்பு.

மாநகர சபை அலுவலகம்,
நீர்கொழும்பு.
2025, ஒற்றோபர் 07.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர் | - | எம்.எச். எம். சிஹான் |
| இறைச்சி வியாபாரம் நடத்திச் செல்வதற்கான பரிந்துரைக்கப்பட்ட இடம் | - | இல. 42, யோன் வீதி, நீர்கொழும்பு. |
| வியாபாரத்தின் இயல்பு | - | மாட்டிறைச்சி வியாபாரம் |

10-207

**மாவத்தகம பிரதேச சபை**

வரவு செலவுத்திட்ட அறிக்கை - 2026

மாவத்தகம பிரதேச சபையின் 2026 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை 2025 ஒற்றோபர் 21 ஆம் திகதி முதல் 2025 ஒற்றோபர் 29 ஆந் திகதி வரை (அரச விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர்ந்த) அலுவலக நேரத்திற்குள் மாவத்தகம பிரதேச சபை அலுவலகத்தில் மற்றும் மாவத்தகம பொதுமக்கள் நூலகத்தில் பொதுமக்களின் பரிசீலனைக்காக வைக்கப்படும் என்பதை பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தும் விதிகளின் 10.2 (ஆ) விதியின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டி. துஷார விஜயசேகர,
பிரதேச சபை தலைவர்,
மாவத்தகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாவத்தகம.
2025 ஒற்றோபர் 10.

10-210

---

**சிலாபம் பிரதேச சபை**

வரவு செலவு திட்ட வரைவு - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்துடன் இணைந்து வாசிக்கப்பட்ட, வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2020.10.29 ஆம் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2199/15 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தாயாரிப்பு மற்றும் அமுலாக்கத்தின் விதி எண் 10( 2) இன் படி, சிலாபம் பிரதேச சபையால் தயாரிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 2025.10.17 முதல் 2025.10.28 வ ரை அரசாங்க வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் சிலாபம் பிரதேச சபை தலைமை அலுவலம் மற்றும் யாகம்பத்துவ துணை அலுவலகம், மாதம்பை துணை அலுவலகம், முன்னேஸ்வரம் துணை அலுவலகம், காக்கப்பள்ளி துணை அலுவலகம் ஆகியவற்றில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பறை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம். பி. அருண ஸ்ரீ ஆனந்த,
தலைவர்,
சிலாபம் பிரதேச சபை.

சிலாபம் பிரதேச சபை அலுவலகம்,
மாதம்பை.
2025 ஒற்றோபர் 10.

10- 222

**ரிதீகம பிரதேச சபை**

பிரதேச சபை வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் செயல்படுத்தல் விதிகளின் பிரிவு 10(2) இன் படி, அதிகார வரவு செலவுத் திட்டப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு இது ஒரு அறிவிப்பாகும்.

2026 ஆம் ஆண்டின் ரிதீகம பிரதேச சபை வரவு செலவுத்திட்ட சுருக்க வரைபினை கீழ்க் காணப்படும் இடங்களில் வைக்கப்படுவதுடன் அதனை பொது மக்கள் பரிசீலித்துப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்பதனை இத்துடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

01. பிரதேச சபை பிரதான அலுவலகம் - ரிதீகம
02. பிரதேச சபை அலுவலகம் - தொடங்கஸ்லந்த/ ஹேவாவிஸ்ஸ
03. பொது நூலகம் - தொடங்கஸ்லந்த/ றம்படகல்ல/ ஹேவாவிஸ்ஸ/ ரிதீகம

தலைவர்.
ரிதீகம பிரதேச சபை

பிரதேச சபை அலுவலகம்,
ரிதீகம,
2025 ஒற்றோபர் 10.

10- 223

---

**கருவலகஸ்வெவ பிரதேச சபை**

**வரைவு வரவு செலவு ஆவணம் - 2026**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்துடன் வாசிக்கப்பட்ட வேண்டிய வடமேல் மாகாண மண்புமிகு ஆளுநர் அவர்களால் 2020.10.29 ஆம் திகதியுடையதும் 2199/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச வர்தமானப் பத்திரத்தில் (அதிவிஷேட) பிரசரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பிரதேச சபையின் வரவு செலவு தயரிப்பு மற்றும் நடைமுறைப்படுத்தும் விதி இல. 10(2) பிரசாரம் கருவலகஸ்வெவ பிரதேச சபையினால் 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வரைவு வரவு செலவு ஆவணம் 10.10.2025 ஆம் திகதி தொடக்கம் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பொது மக்களுக்கு பரிசீலித்து பார்ப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகிறேன்.

என். எம். நீல் நவரத்ன,
தலைவர்.

பிரதேச சபை,
கருவலகஸ்வெவ.

10- 224

**மீகஹாகிவுல பிரதேச சபை**

**வரவு செலவு திட்டத்தின் ஆய்விற்கான பொது அறிவிப்பு - 2026**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் படி, 2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை தயாரிக்கும் மற்றும் அமுல்படுத்தும் விதிமுறைகளின் படி, 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தின் வரைவு ஆவணம் 2025 ஒற்றோபர் 17 ஆம் திகதி முதல் 2025 ஒற்றோபர் 27 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை அதிகாரவரம்பு எல்லைக்குட்பட்ட பொது மக்கள் பார்வையிடக்கூடிய வகையில் அலுவலக வளாகத்திலும் பொது நூலக வளாகத்திலும் வைக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

டீ.எம். குமாரதிஸ்ஸ,
தவிசாளர்,
மீகஹாகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹாகிவுல.

10-225

---

**காலி மா நகர சபை**

மா நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) சரத்தின் கீழ் (அதிகாரம் 252) விடுக்கப்படும் அறிவித்தல்.

தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சாலைகளைப் பெயரிடுதல் மற்றும் நினைவுத்தூபிகளை நிறுவுதலும் பராமரித்தலும் சட்டத்தின் மூன்றாவது சரத்தின் ஊடாக திருத்தப்பட்ட மா நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆவது சரத்தின் பிரகாரம் (அதிகாரம் 252) மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர்புபட்ட) ஏற்பாட்டுச் சட்டத்தின் 2(1) (அ) சரத்தின் பிரகாரம் கௌரவ தென் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை முன்னால் காட்டப்பட்டுள்ளவாறு பெயரிடப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

ஆர். எம். டீ. கே. ரஸ்நாயக,
நகராட்சி ஆணையாளர்,
காலி மா நகர சபை.

மா நகர சபை அலுவலகம்,
காலி,
2025 ஓகத்து,

**அட்டவணை**

| *சாலையின் தொடக்கமும் முடிவும்* | *சாலையைப் பெயரிடுதல்* |
|---|---|
| ரிச்மண்ட் கந்த புகையிரத கடவைக்கு அருகிலிருந்து ஆரம்பிக்கும் வக்வெல்ல வீதியில் இருந்து எஸ். எச். தகநாயக மாவத்தை வரையான சாலை | "யூ. ஜீ, டீ. ஆரியதிலக மாவத்தை" (கும்பல்வெல்ல II ஆம் ஒழுங்கை) |

10-235

# நானாவித அறிவித்தல்கள்

**மீகஹாகிவுல பிரதேச சபை**

அனுமதிப்பத்திரக் கட்டணங்களை விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 149 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபையினால், அப்பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கீழ் குறிப்பிட்டுள்ள அனுமதிப்பத்திரக்கக் கட்டணங்களை விதித்து அறவிட முடியும். அதற்கமைய வருடாந்த மதிப்பின் அடிப்படையில் அனுமதிப்பத்திரக் கட்டமொன்றை 2026 ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிடுவதற்கு மீகஹாகிவுல பிரதேச சபையினால் 2025 ஆம் வருடம் ஓகத்து மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் கால அவகாசம் வழங்கப்பட்ட தீர்மான இலக்கம் 16 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

அவ்வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணங்களை 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தி முடிக்க வேண்டுமென்பதுடன், அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ளபட்டுள்ள வரித் தொகைகளையும் வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணங்களுக்கு மேலதிகமாக செலுத்த வேண்டியிருக்கும்.

டீ.எம். குமாரதிஸ்ஸ,
தவிசாளர்,
மீகஹாகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹாகிவுல.
2025, ஒற்றோபர் 07.

**தீர்மானம்**

பிரதேச சபையினால் உருவாக்கப்பட்ட துணைச் சட்டங்களின் கீழ் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையான துணைச் சட்டங்களின் கீழ் 2026 ஆம் ஆண்டு மீகஹாகிவுல பிரதேச சபையினால் வழங்கப்பட்ட உரிமங்கள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 149 ஆம் பிரிவில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பின்வரும் அட்டவணையின் I வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தொழிலுக்கும், அவ்வட்டவணையின் II வது நேரொத்த நிரலில் காட்டப்பட்டுள்ள அளவில் அனுமதிப்பத்திர கட்டணமொன்றை விதித்து அறவிடுவதற்கும்,

அவ் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழில் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கமுடைய சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் பணிகளுக்காக இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில், மேலுள்ள 2 ஆவது பிரிவில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், மேற்கூறிய ஹோட்டல் அல்லது உணவகம் அல்லது தங்கும் இடம் அல்லது அது நடத்தப்படும் இடம் ஆகியவற்றிற்கு தவிசாளர் வழங்கிய உரிமத்தின் மீது 2026 ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய கட்டணம் அந்த ஹோட்டல் அல்லது உணவகம் அல்லது தங்கும் இடத்தில் 2025 ஆம் ஆண்டு வருமானத்தின் ஒரு சதவீமாக (1%) இருக்க வேண்டுமெனவும் மீகஹாகிவுல பிரதேச சபை முன்மொழிகின்றது.

**அட்டவணை**

| *தொ. இல.* | *நிரல் I அதிகாரமளிக்கும் பணிகள்* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 1. | பழ வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. | சில்லறை வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. | காய்கறி வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. | சில்லறை வியாபாரம் (மொத்தம்) | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. | மிதிவண்டி பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. | மீன் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. | மோட்டார் வாகன பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. | முச்சக்கர வண்டி பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. | மரம் அறுக்கும் ஆலை (கையால் அறக்கப்படும் பலகை) | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | தச்சு வேலைத்தளமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | மின் தொழில் வேலைத்தளம் (வானொலி மற்றும் தொலைகாட்சி இயந்திரம்) | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டு பொதி செய்யப்பட்ட குளிரூட்டப்பட்ட கோழியிறைச்சி மற்றும் மீன் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | கருவாடு விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | முட்டை விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | குரொசரி | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | பாக்கு, உலர்பாக்கு, மிளகு, கோப்பி கொள்வனவு | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | வெட்டப்பட்ட துணிகள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | தோல்/ரெக்சின் பொருட்கள் உற்பத்தி (காலணிகள், பேக் மற்றும் இதர) | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | ஒலியமைப்பு இயந்திரங்களை இயக்குதல் மற்றும் வாடகைக்கு விடுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | ஹோட்டல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | சாப்பாட்டுக்கடை, உணவகம் மற்றும் தேநீர் கடை | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | பேக்கரி | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | பாற்பண்ணை மற்றும் பால் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | மீன் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | இறைச்சி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 26. | லொட்டரி | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | சுற்றுலா வியாபாரம் (வடை, கடலை, பைட் வகைகள், பேக்கரி பொருட்கள்) | 500.00 | 750.00 | 1000.00 |
| 28. | பொது விற்பனை நிலையங்கள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | பாபர் சலூன் | 500.00 | 750.00 | 1000.00 |
| 30. | வாசனை திரவியங்கள் அல்லது கிருமி நாசினி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I அதிகாரமளிக்கும் பணிகள்* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 31. | வண்ணப்பூச்சு/வார்னிஷ் வகை விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | தங்குமிட வசதிகளுடன் கூடிய வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 33. | கணினி அச்சு நடவடிக்கைகள் | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | அரிசி மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 35. | கடிகாரங்கள் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

கவனத்தில் கொள்க சுற்றுலா சபையினால் அனுமதி வழங்கப்பட்ட ஹோட்டல், உணவகங்கள், விடுதிகள் சென்ற வருட வருமானத்தில் 1% அனுமதிப்பத்திர கட்டணத்தை செலுத்த வேண்டும்.

| *தொ. இல.* | *நிரல் I அதிகாரமளிக்கும் பணிகள்* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| | **வெறுக்கத்தக்க வியாபாரங்கள்** | | | |
| 36. | விவசாய இரசாயன பொருட்களை களஞ்சியப்படுத்தல், விற்பனை நிலையமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | அமில வகைகள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | பைபர் கிளாஸ் உற்பத்தி, விற்பனை நிலையமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | கால்நடை வளர்ப்பு (பால் மற்றும் இறைச்சிக்காக) | 500.00 | 750.00 | 1000.00 |
| 40. | கால்நடை உணவு உற்பத்தி, விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | தளபாட பொருட்கள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | பிரம்பு பொருட்கள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | தச்சு தொழிற்சாலை ஒன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | மெழுகுவர்த்தி உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 45. | செங்கல் சுடுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 46 . | இயந்திரம் மூலம் சீமெந்து அச்சுக் கற்கல் உற்பத்தி, விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | நாற்றாங்கால் பராமரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I அதிகாரமளிக்கும் பணிகள்* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| | **விரும்பத்தக்க, ஆபத்தான வியாபாரங்கள்** | | | |
| 01. | உர விற்பனை நிலையமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | சிற்பி அரைக்கும் ஆலை உறை இரசாயன பொருட்கள் உற்பத்தி நிறுவனமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. | பெட்டரி சார்ஜ் செய்யும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | இளநீர், குரும்பை விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | சுண்ணாம்பு கல் சுடுதல் மற்றும் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. | கருங்கல் வேலைத்தளம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. | அழகு நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08. | குளிரூட்டிகள், குளிர்சாதன பெட்டிகள், உறைகல இயந்திரங்களை பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09. | காளான் வளர்ப்பு மற்றும் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| | **ஆபத்தான வியாபாரங்கள்** | | | |
| 01. | வெல்டிங் வேலைத்தளம் (ஒக்ஸி அமிலம் பாவனை) | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | வெல்டிங் வேலைத்தளம் (மின் பாவனை) | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. | கண்ணாடி தகடு வெட்டுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | போட்டொ பிரதி எடுக்குமிடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | குஷன் வேலைத்தளம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. | பத்தி உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. | எரிவாயு விற்பனை/விற்பனை முகவர் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08. | நகை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 09. | பட்டாசு வானவேடிக்கை விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | கண்ணாடி பொருட்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | கிரில் கேட் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | டிங்கர் வேலை | 500.00 | 750.00 | 1000.00 |

10-214/ 1

---

**மீகஹாகிவுல பிரதேச சபை**

தொழில் வரியை விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) வது உட்பிரிவின் கீழ் மீகஹாகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் கீழ் குறிப்பிட்டுள்ள அட்டவணையில் காட்டப்படுள்ள

தொழில்கள் தொடர்பாக வருடாந்த மதிப்பின் அடிப்படையில் தொழில் வரியை 2026 ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிடுவதற்கு மீகஹாகிவுல பிரதேச சபையினால் 2025 ஆம் வருடம் ஓகத்து மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் கால அவகாசம் வழங்கப்பட்ட தீர்மான இலக்கம் 16 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

அத்தொழில் வரி கட்டணங்களை 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தி முடிக்க வேண்டுமென்பதுடன், அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள வரித் தொகைகளையும் தொழில் வரி கட்டணங்களுக்கு மேலதிகமாக செலுத்த வேண்டியிருக்கும்.

டீ.எம். குமாரதிஸ்ஸ,
தவிசாளர்,
மீகஹாகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹாகிவுல.
2025, ஒற்றோபர் 07.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 வது பிரிவின் (1) வது அட்டவணையில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மீகஹாகிவுல பிரதேச சபையின் அதிகார வரம்பிற்குள் நடத்திச் செல்லப்படும் பின்வரும் அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு தொழிலுக்காக, அவ்வட்டணையின் II நிரலில், ஒவ்வொரு தொழிலையும் நடத்திச் செல்லும் இடத்தின் வருடாந்த பெறுமதிக்கு நேரொத்த நிரலில் காட்டப்பட்டுள்ள அளவில் தொழில் வரியொன்றை 2026 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிட வேண்டுமெனவும், அத்தொழில் வரிக்கு உட்பட்ட நபர் ஒருவர் 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மீகஹாகிவுல பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென மீகஹாகிவுல பிரதேச சபை முன்மொழிகின்றது.

**அட்டவணை**

| *தொ. இல.* | *நிரல் I தொழில்* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 01. | செங்கள்/சீமெந்து கல், வேலைப்பாடுகள், பூ தொட்டிகள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 02. | ஐஸ்கிரீம் / குரிர்பான பெக்கட் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 03. | பாற் பொருள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 04. | களிமண் பொருள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 05. | காலணி தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 06. | பானி/ கருப்பட்டி உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 07. | கை இயந்திரம் மூலம் துணி நெய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 08. | ஈற்கில்/தும்புத்தடி/மிதியடி உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 09. | பத்தி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I தொழில்* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 10. | பேக் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | ஆடை தைத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | டிஜிடல் தொழில்நுட்ப அச்சகமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | குஷன் வேலைத்தளமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | மர அச்சு வேலைத்தளம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | தேங்காய் எண்ணெய் ஆலை | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | தங்க நகை தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | புகைப்பட நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | சுண்ணாம்பு, செங்கல் சூலையொன்றை பராமரித்தல். | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | அரைக்கும் ஆலை ஒன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | வலுசக்தி தேயிலை தொழிற்சாலை ஒன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | நெல் ஆலை | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | முச்சக்கரவண்டி பழுதுபார்க்கும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | இயந்திர உபகரணங்களை பழுதுபார்க்கும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 26. | உள்நாட்டு மருந்து பொருள் உற்பத்தி நிறுவனமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | லேத் பட்டறை ஒன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 28. | மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள் பழுதுபார்க்கும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | ஆடை தொழிற்சாலை ஒன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 30. | கல் குழி ஒன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 31. | இயந்திரம் மூலம் அச்சு கற்களை தயாரிக்கும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | வெல்டிங் வேலைத்தளமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 33. | தளபாடங்கள் அலங்கார பொருட்கள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | கூடை, தட்டு போன்ற பிரம்பு பொருட்கள் தயாரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 35. | இலக்ட்ரொனிக் வேலைத்தளமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 36. | கராஜ் | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | மர ஆலை | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | இயந்திரம் மூலம் கருங்கல் அரைக்கும் இடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | குளிரூட்டிகள் குளிர்சாதன பெட்டிகளை பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I தொழில்* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 40. | அச்சகமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | தச்சு கூடமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | தொழிற்சாலையொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | பேக் தைத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | தளபாட உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 45. | இனிப்புகள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 46. | மணல் அகல்வு அல்லது மணல் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | லொன்டரியொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 48. | அழகு நிலையமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 49. | கண்ணாடி வெட்டுதல், படம் சட்டமடித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 50. | வெல்டிங் வேலைத்தளமொன்றை பராமரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 51. | காளான் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 52. | காணிகளை ஏலம் விடுதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 53. | கடிகாரங்களை பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 54. | மெழுகுவர்த்தி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 55. | வாகனங்களுக்கு வண்ணப்பூச்சு செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 56. | வாகன சுத்திகரிப்பு | 500.00 | 750.00 | 1000.00 |
| 57. | விளக்கு நிழற்குடைகள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |
| 58. | வாகன கூடாரம் அடித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 59. | வாகன திரைச்சீலை அடித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 60. | பருத்தி பொருள் உற்பத்தி | 500.00 | 750.00 | 1000.00 |

10-214/2

---

**மீகஹாகிவுல பிரதேச சபை**

வியாபார வரி விதித்தல் - 2026

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் (1) வது உட்பிரிவின் கீழ் அல்லது 150 ஆம் பிரிவின் கீழ் மீகஹாகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணங்களுக்கு அல்லது தொழில் வரிக்குட்படாத வியாபார மற்றும் தொழில் தன்மைகள் தொடர்பாக வருடாந்த மதிப்பின் அடிப்படையில் வியாபார வரியொன்றை 2026 ஆம் ஆண்டிற்கு விதித்து அறவிடுவதற்கு மீகஹாகிவுல பிரதேச சபையினால் 2025 ஆம் வருடம் ஓகத்து மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் கால அவகாசம் வழங்கப்பட்ட தீர்மான இலக்கம் 16 இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

அவ்வியாபார வரி கட்டணங்களை 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்தி முடிக்க வேண்டுமென்பதுடன், அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள வரித் தொகைகளையும் தொழில் வரிக் கட்டணங்களுக்கு மேலதிகமாக செலுத்த வேண்டியிருக்கும்.

டீ.எம். குமாரதிஸ்ஸ,
தவிசாளர்,
மீகஹாகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹாகிவுல.
2025, ஒற்றோபர் 07.

**தீர்மானம்**

“1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின்” 152 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், அந்த சட்டத்தில் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட துணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்ள அல்லது சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு வரியை செலுத்த தேவையற்ற ஏதாவதொரு வியாபாரத்தை 2026 ஆம் ஆண்டில் மீகஹாகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடத்திச்செல்லும் ஒவ்வொரு நபரிடமும் அவ்வியாபாரத்தின் 2022 ஆம் ஆண்டு வருமானம் கீழ்வரும் அட்டவணையில் 1 ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு விடயத்திற்குட்பட்ட எல்லைக்குள் நடாத்திச் செல்லப்படும் சந்தர்ப்பத்தில் அதன் II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அளவின் படி வியாபார வரியை 2026 ஆம் ஆண்டுக்கு விதித்து அறவிடவும், வரி செலுத்த வேண்டிய ஏதாவதொரு நபர் அவ்வியாபார வரியை 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிபிலை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமெனவும், மீகஹாகிவுல பிரதேச சபை முன்மொழிகின்றது.

**அட்டவணை**

I வது பகுதி:
**வியாபாரங்கள்**

1. சில்லறை விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
2. துணிகள் அல்லது தைக்கப்பட்ட ஆடை விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
3. பென்சி பொருட்கள் விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
4. காலணிகள் விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
5. தொடர்பாடல் நிலையமொன்றை பராமரித்தல்
6. வர்ண ஆய்வுகூடமொன்றை பராமரித்தல்
7. கட்டப் பொருட்கள் விற்பனை வியாபாரமொன்றை பராமரித்தல்
8. வண்ணப்பூச்சு, சாய விற்பனை செய்யும் வியாபாரமொன்றை பராமரித்தல்
9. தனியார் கல்வி நிறவனமொன்றை பராமரித்தல்
10. முன்பள்ளி பிள்ளைகள் காப்பகமொன்றை பராமரித்தல்.
11. கணினி பயிற்சி பாடநெறியொன்றை நடத்துதல்
12. கணினி மென்பொருள் அபிவிருத்தி நிலையமொன்றை பராமரித்தல்
13. ஓட்டுனர் பயிற்சி நிறுவனமொன்றை பராமரித்தல்
14. கூட்டுறவுச் சங்க சில்லரை (தனியார்) விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
15. மேற்கத்திய வைத்திய நிலையமொன்றை பராமரித்தல்
16. ஆயுர்வேத வைத்திய நிலையமொன்றை பராமரித்தல்
17. நிதி நிறுவனமொன்றை பராமரித்தல்

18. காப்புறுதி சேவை வழங்கும் இடமொன்றை பராமரித்தல்
19. லீசிங் சேவைகள் வழங்கும் இடமொன்றை பராமரித்தல்
20. தனியார் மருத்துவமனையொன்றை பராமரித்தல்
21. தங்கநகை விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
22. கணினி பாகங்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
23. மரப்பலகை பொருட்கள் விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
24. விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமொன்றை பராமரித்தல்
25. உற்சவ பொருட்களை வாடகைக்கு விடுதல்
26. மூக்கு கண்ணாடி விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
27. லொத்தர் முகவர் நிறுவனமொன்றை பராமரித்தல்
28. பீங்கான், களிமண் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை
29. ரேஸ் புக்கியொன்றை பராமரித்தல்
30. படங்களை சட்டம் செய்தல், கண்ணாடி வெட்டும் இடமொன்றை பராமரித்தல்
31. நெல் கொள்வனவு செய்யும் இடமொன்றை பராமரித்தல்
32. தொடர்பாடல் சேவை வழங்கும் நிறுவனமொன்றை பராமரித்தல்
33. கையடக்க தொலைபேசிகளை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
34. வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றை பராமரித்தல்
35. வீடியோ நாடாக்கள், இருவட்டுகள் விற்பனை அல்லது வாடகைக்கு விடும் இடமொன்றை பராமரித்தல்
36. எழுதுபொருட்கள் அல்லது புத்தக விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
37. மரப்பலகை பொருட்கள் விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
38. செய்தித்தாள் விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
39. சங்கீத பொருட்கள் அல்லது விளையாட்டுப் பொருட்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
40. களஞ்சியமாக வாடகைக்கு விடும் இடமொன்றை பராமரித்தல்
41. மின் உபகரணங்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
42. மொத்தமாக பொருட்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
43. சீமெந்து விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
44. பிரசித்திபெற்ற நிறுவனங்களின் பொருட்களை விநியோகிக்கும் முகவர் நிறுவனமொன்றை பராமரித்தல்
45. வாகனங்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
46. மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டிகளை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
47. வெற்றிலை, பாக்கு விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
48. பல்பொருள் அங்காடியொன்றை (புட் சிட்டி) பராமரித்தல்
49. விலங்கு உணவுகளை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
50. புகையிலை பொருட்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
51. பயன்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
52. பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
53. வைத்தியர்கள், நோயாளர்கள் சந்திக்கும் நிறுவனமொன்றை (செனல் சென்டர்) பராமரித்தல்
54. மின் உபகரணங்களை பழுதுபார்க்கும் இடமொன்றை பராமரித்தல்
55. தேயிலைகளை சேகரிக்கும் இடமொன்றை பராமரித்தல்
56. வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
57. அதிகாரம்பெற்ற சாராயம், வெளிநாட்டு மதுபானம் விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
58. மேற்கத்திய ஔடதங்களை விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல் (பாமசி)
59. வாசனை உணவுப்பொருட்களை சேகரிக்கும் இடமொன்றை பராமரித்தல்
60. வாகன புகை பரிசோதனை செய்யும் விற்பனை செய்யும் இடமொன்றை பராமரித்தல்
61. எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை பராமரித்தல்
62. நடமாடும் விற்பனை வாகனம் அல்லது நடமாடும் விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
63. தேயிலை தொழிற்சாலையொன்றை பராமரித்தல்
64. எரிவாயு விற்பனை நிலையமொன்றை பராமரித்தல்
65. பழைய உலோகங்களை சேகரிக்கும் இடமொன்றை பராமரித்தல்

66. காய்கறி பழங்கள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றை பராமரித்தல்
67. மொத்தமாக பொருட்களை களஞ்சியப்படுத்தி விற்பனை செய்தல் ( கல், மணல், செங்கல், சீமெந்து, உரம்.....)

II வது பகுதி
2025 ஆம் வருடத்தில் வியாபாரத்தின் வருவாய்

| | *I வது நிரல்* | *II வது நிரல்* |
|---|---|---|
| i. | ரூ. 6,000.00 க்கு விஞ்சாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் | இல்லை |
| ii. | ரூ. 6,000.00 க்கு மேல் ஆனால் ரூ.12,000.00 க்கு விஞ்சாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் | 90.00 |
| iii. | ரூ.12,000.00 க்கு மேல் ஆனால் ரூ.18,750.00 க்கு விஞ்சாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் | 180.00 |
| iv. | ரூ.18,750.00 க்கு மேல் ஆனால் ரூ.75,000.00 க்கு விஞ்சாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் | 360.00 |
